Judicial Form No.53
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC.No.14 /2023 | | |
| Witness for Complainant | : PW4– Chief and Cross | | |
| Name | : மோகன் | Taluk | : ஊத்தங்கரை |
| Father's / Husband Name | : | Calling : | |
| Village | : | Age : | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 25.03.2026.
துவக்க நேரம்– 6.40 PM

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் தற்போது சாமல்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கூடுதல் பொறுப்பாக ஊத்தங்கரை காவல் நிலைய உதவியாளர் ஆய்வாளராகவும் இருந்து வருகிறேன். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.09.2022ஆம் தேதி ஊத்தங்கரை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.ஜெயகாந்தன் என்பவர் இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று ஊத்தங்கரை அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த சுரேஷ்குமார் என்பவர் வந்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**, பின்னர் நிலையம் வந்து குற்ற எண் 406/2022 சட்டப்பிரிவுகள் 294பி , 323, 324, 427 இதச ஆகு வழக்கு பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்கின் சம்பவ இடத்திற்கு 9/9/2022 தேதி 8:30 மணிக்கு சாட்சிகள் கந்தசாமி, அரிப்புத்திறன் ஆகியோர்

முன்னிலையில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5, 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் சுரேஷ்குமார், ஆறுமுகம் செல்வி, பழனியம்மாள், சீனிவாசன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பின்னர் வழக்கில் காயமடைந்த சுரேஷ்குமார், ஆறுமுகம், செல்வி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரவீனா கோமதி என்பவரை விசாரித்து சிகிச்சை பெற்ற சுரேஷ்குமார், ஆறுமுகம், செல்வி, ஆகியோர்களது விபத்து பதிவேடுகள் மற்றும் காயச் சான்றிதழ்கள் முறையே அ.சா.ஆ.7, முதல் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கில் எதிரிகள் பயன்படுத்திய ரீப்பர் கட்டையை அரிபுத்திரன் மற்றும் கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் கையகபடுத்தி கைப்பற்றுதல் மகஜர் மற்றும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **( ரீப்பர் கட்டை சா.பொ. 1 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் படிவம் 91 அ.சா.ஆ.13, 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் இவ்வழக்கின் எதிரிகள் ஊத்தங்கரை குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்னிலையில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார்கள். பின்னர் வழக்கினை விசாரித்து புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் குட்டியப்பன் எதிரிகள் மீது 294பி, 323, 324, 427 இதச பிரிவுகளில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கில் புகார்தாரரிடம் இருந்து வெற்றுபேப்பரில் மட்டும் கையொப்பம் பெற்று புகார்தாரர் சொல்லாத சங்கதிகளை போலிசாரே நிரப்பி கொண்டு எதிரி மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சம்பவஇடம் செல்லாமல் பார்வை மகஜர், வரைபடம் ஆகியவை காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரி கைது

செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை, எதிரியிடம் இருந்து எவ்வித பொருளும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

முடிவு நேரம்– 7.00 PM

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

Judicial Magistrate
Uthangarai.